**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 201** **நாள் : 12.06.2026**

**பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் 12.05.2026 முதல் 09.06.2026 வரை சுவரொட்டிகள் ஒட்டியவர்களுக்கு ரூ.2.45 இலட்சம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.**

**மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி. எஸ். சமீரன், இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் சென்னை மாநகரை தூய்மையாகவும், அழகுடனும் பராமரிக்க மாநகராட்சி சார்பில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதன் ஒரு பகுதியாக, மாநகராட்சிப் பகுதிகளில் சென்னை மாநகரின் அழகை சீர்குலைக்கும் வகையில் மேம்பாலங்கள், சாலையோரங்களில் உள்ள சுவர்கள், அரசு மற்றும் மாநகராட்சி கட்டடங்கள் உள்ளிட்ட பொது இடங்களில் சுவரொட்டிகள் ஒட்டுவதற்கு தடைசெய்யப்பட்டுள்ளது. மீறி சுவரொட்டி ஒட்டுபவர்கள் மீது மாநகராட்சி மூலமாக அபராதம் விதித்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அவ்வாறாக, பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 12.05.2026 முதல் 09.06.2026 வரையிலான ஒரு மாத காலத்தில் அரசு, மாநகராட்சி கட்டடங்கள் மற்றும் பொது இடங்களில் விதிகளை மீறி ஒட்டப்பட்ட 4,491 சுவரொட்டிகள் அகற்றப்பட்டு, சம்பந்தப்பட்டவர்களுக்கு ரூ.2,45,000/- அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

**அதன் விவரம் :**

| வ. எண் | மண்டலங்கள் | அகற்றப்பட்ட சுவரொட்டிகள் | சுவரொட்டிகள் ஒட்டிய நபர்களுக்கு விதிக்கப்பட்ட அபராதத் தொகை (ரூ.) |
|---|---|---|---|
| 1. | திருவொற்றியூர் | 394 | 15,000 |
| 2. | மணலி | 352 | 5,000 |
| 3. | மாதவரம் | 276 | 10,000 |
| 4. | தண்டையார்பேட்டை | 32 | 5,000 |
| 5. | இராயபுரம் | 106 | 5,000 |
| 6. | திரு.வி.க.நகர் | 400 | 15,000 |
| 7. | அம்பத்தூர் | 239 | 5,000 |
| 8. | அண்ணாநகர் | 446 | 5,000 |
| 9. | தேனாம்பேட்டை | 235 | 50,000 |
| 10. | கோடம்பாக்கம் | 1019 | 5,000 |

| | | | |
|---|---|---|---|
| 11. | வளசரவாக்கம் | 336 | 5,000 |
| 12. | ஆலந்தூர் | 108 | 15,000 |
| 13. | அடையாறு | 176 | 70,000 |
| 14. | பெருங்குடி | 130 | 10,000 |
| 15. | சோழிங்கநல்லூர் | 242 | 25,000 |
| **மொத்தம்** | | **4,491** | **2,45,000** |

எனவே, பொதுமக்கள் பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பொது இடங்களில் சுவரொட்டிகள் ஒட்டுதல் மற்றும் சுவர் விளம்பரங்கள் வரைதல் ஆகியவற்றை தவிர்த்து சென்னை மாநகரை தூய்மையாக பராமரிக்க முழு ஒத்துழைப்பை வழங்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்ளப்படுகிறது. மீறும் நபர்களுக்கு அபராதம் விதித்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி. எஸ். சமீரன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**